In the Court of the I Addl. District Court, Madurai.
Deposition of Witness
**probate.O.P.No.15/2024**
DEPOSITION OF P.W. 1 WITNESS FOR THE

| | | |
|---|---|---|
| Name | : | திரு.காந்தி. |
| Father's name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 06.02.2025

முதல் விசாரணை -

நான் இந்த வழக்கில் 1வது மனுதாரராவேன். எனது தரப்பில் நிரூபண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளைத் தெரிந்து கொண்டு அதன் ஒவ்வொரு பக்கத்திலும் நான் கையொப்பம் செய்துள்ளேன். நான் எனது தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன். அவை முறையே,

**ம.சா.ஆ. 1** - 27.03.1995-ம் தேதி ராமசந்திரன் மற்றும் சுப்புராஜ் வகையறாவிற்கு இடையே மதுரை சார்பு நீதிமன்றத்தில் .அ.வ.1001/1990-ல் வழங்கிய சமரச தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல்.

**ம.சா.ஆ. 2** - 04.03.2007 -ம் தேதி ராமச்சந்திர கென்னடி எனக்கு எழுதிக் கொடுத்த பதிவு செய்யப்பட்ட உயிலின் அசல்.

**ம.சா.ஆ. 3** - 11.05.2011-ம் தேதியிட்ட ராமச்சந்திரனின் இறப்பு சான்றிதழ் அசல்.

**ம.சா.ஆ. 4** - 10.08.2018 அன்று வாடிப்பட்டி வட்டாட்சியர் வழங்கிய வாரிசு சான்றிதழ்.

**ம.சா.ஆ. 5** - 28.12.2018-ம் தேதி வாடிப்பட்டி வட்டாட்சியர் சுப்பாரெட்டியார் மகன் ராமச்சந்திரன் என்பவரும் சுப்பாரெட்டியாரின் மகன் ராமச்சந்திர கென்னடி என்பவரும் ஒருவரே என்று வழங்கிய சான்றிதழின் அசல்.

**ம.சா.ஆ. 6** - 05.12.2022-ம் அன்று உயர்நீதிமன்ற மதுரை கிளையில் AS (MD) No.56/2010 மேல்முறையீட்டு வழக்கில் CMP (MD) No.4328/2022 உத்தரவின் பதிவிறக்க நகல்.

**ம.சா.ஆ. 7** - 24.08.2017-ம் தேதி எதிர்மனுதாரரான பாப்பம்மாள் எனக்கு எழுதி பதிவு செய்து கொடுத்த உறுதி மொழி ஆவணம்.

**ம.சா.ஆ. 8** - பாப்பம்மாள் என்பவருக்கு நான் பல தவணைகளாக பணம் கொடுத்தற்கான வங்கி கணக்கு பட்டியல்.

(மேலும் ஆவணங்களை தாக்கல் செய்வதற்காக மனுதாரரின் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.)

ஒப்பம் - காந்தி.
சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd/-xxx,

முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி (மு.கூ.பொ),

மதுரை.